
காந்தியும் கம்யூனிசமும்



ஆர். பட்டாபிராமன்

சிறு வெளியீடு நவம்பர் 2021

(சத்திய ஒளி மகாத்மா புத்தகத்திற்காக காந்தி கல்வி நிலையம் திரு மோகன் அவர்கள் கேட்டதற்கிணங்க அவருக்கு ஜூலை 5 2021ல் அனுப்பிய கட்டுரை)

காந்தியமும் கம்யூனிசமும் ஒரு பார்வை

- ஆர். பட்டாபிராமன்

காந்திய இயக்கங்கள் சார்பில் 'காந்தியை முன்னெடுப்போம் தொடர் சொற்பொழிவு நிகழ்விற்காக அமைத்துக்கொள்ளப்பட்ட தலைப்புகளில் இவ்வுரையும் ஒன்று. காந்தியை குறித்த தவறான தகவல்களை நேர்செய்வது என்கிற பொறுப்புடன் இந்த தொடர் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. காந்தியத்தை முன்னெடுக்கும் திரு அண்ணாமலை, ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்ட திரு குகன் மற்றும் இயக்க அமைப்பாளர்களுக்கு நன்றி.

காந்தியமும் கம்யூனிசமும் ஒரு பார்வை என மிக அடக்கமாக தலைப்பை எடுத்துக்கொண்டுள்ளோம். வேறு பல பார்வைகள் இருக்கும்- இருக்கின்றன என்கிற புரிதலுடன்தான் இவ்வுரை தரப்படுகிறது. காந்தியைப்பற்றி இலட்சக்கணக்கான பக்கங்கள் இருப்பதைப்போலவே கம்யூனிசம்- மார்க்சியம் குறித்தும் இலட்சக்கணக்கான பக்கங்கள் பல்வேறு விளக்கங்கள் இருந்துவருகின்றன. எனவே கயிற்றின்மேல் நடக்கும் கலை இங்கும் தேவைப்படுகிறது.

புரிதலை சற்று எளிமைப்படுத்துவதற்காக இவ்வுரை 5 துணைதலைப்புகளில் அமைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.. இதை ஒரு குறிப்பிட்ட பார்வை என்கிற அளவில் எடுத்துக்கொள்ளவேண்டும். கம்யூனிசம் என்றால் என்ன, காந்தியின் சோசலிசம் அதற்கான மூலங்கள், அரசு-வன்முறை-தொழில் உறவுகள், காந்தியை குறித்த இந்திய மார்க்சியர் விமர்சனங்கள், காந்தி மார்க்ஸ் சந்திப்பு புள்ளிகள் என்ற தலைப்புகளில் சுருக்கமாக விவாதிக்கலாம்.

I

கம்யூனிசம் என்றால் என்ன என்பது குறித்து பதில் ஒருவரியில் கிடைத்துள்ளதா எனத் தேடினோம் என்றால் நமக்கு கிடைப்பதை பார்க்கமுடியும். இன்றைக்கு 174 ஆண்டுகளுக்கு முன்னர் மார்க்சின் உற்ற நண்பரான எங்கெல்ஸ் 1847ல் எழுதிய Principles Of Communism என்கிற சிறிய புத்தகத்தில் இதைக்காணலாம். இதன் பின்னர் வந்ததுதான் 1848ல் கம்யூனிஸ்ட் மானிபெஸ்ட்டொ என மார்க்ஸ்- எங்கெல்ஸ் எழுதிய பிரபலமான படைப்பு. எங்கெல்ஸ் எழுதிய அப்புத்தகம் கம்யூனிசம் குறித்த கேள்வி பதிலாக வந்தது.

கம்யூனிசம் என்றால் என்ன என்கிற கேள்விக்கு மிக கச்சிதமான பதிலாக எங்கெல்ஸ் தந்துள்ளார். Communism is the science of the conditions for the emancipation of the proletariat. பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்குரிய சூழல்கள் பற்றிய அறிவியல் வகைப்பட்ட கொள்கை பிரகடனம் என அதை சொல்லலாம்.

அடுத்து எழும் கேள்வி பாட்டாளி என்பவர் எவர் என்பதாக இருக்கிறது. தனது உழைப்பை மட்டுமே நம்பி அதை விற்று கூலி பெறுவதன் மூலம் பிழைத்திருக்கும் ஜீவி பாட்டாளி. மூலதனத்திடமிருந்து இலாபம் போன்ற ஏதும் இல்லாத ஜீவி பாட்டாளி.

அவருக்கு கூலி எவ்வாறு நிர்ணயமாகிறது? சந்தையில் உற்பத்தியாகி வரும் சரக்குகள் போலவே இவரது உழைப்பு சக்தியும் சந்தியில் பண்டமாக கருதப்படுகிறது. பிற சரக்குகள் உற்பத்திக்கான விலையைப்போலவே அதே விதிகளால் கூலியும் தீர்மானிக்கப்படுகிறது. அதாவது தொடர்ந்து வேலைக்கு வருவதற்கு தேவையான சக்தியை பெறும் வகையில், அவரது பராமரிப்பிற்கு அவசியமாகின்ற குறைந்த அளவிலான விலை என்பது கூலியாக தரப்படுகிறது.

முதலாளித்துவம் என்றாலே பேரளவு பெருந்தொழில் உற்பத்திமுறைதான். இம்முறை காலச்சுழற்சியில் நெருக்கடிகளை சந்திக்கிறது. முதலாளிகள் மட்டுமில்லாது, உழைப்பவர்கள் ஏன் சமூகமே இதனால் நெருக்கடி சுழலில் சிக்கி சீரழிகின்றது.

நெருக்கடி சீரழிவு சுரண்டலிருந்து பாதுகாத்துக்கொள்ள என்னதான் வழி? பெருந்தொழிலை விடமுடியுமா? முடியாது என்கிறார் எங்கெல்ஸ். ஆனால் மாற்று வழியை தீர்விற்கு முன்வைக்கிறார். புதிய சமூதாயக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்கிறார்.

இந்தப் புதிய சமூக அமைப்புமுறை எந்த வகைப்பட்டதாக இருக்கும்?

போட்டியை நீக்கி ஒத்துழைப்பை இந்த அமைப்பு முன்வைக்கும். இலாபவேட்கையுடன் போட்டியிட்டுக் கொள்ளும் தனிநபர்களின் கைகளிலிருந்து, தொழில்துறையின் கட்டுப்பாட்டை நீக்கி உற்பத்தியின் அனைத்துப் பிரிவுகளையும் சமுதாயமே எடுத்துக் கொள்ளும். தனியுடைமை ஒழிக்கப்பட்டு உற்பத்திக் கருவிகள் அனைத்தும் பொதுப் பயன்பாட்டுக்குரியதாக மாற்றப்படும் அனைவரையும் உழைப்பில் பங்கேற்க செய்து ஒத்துழைப்பை ஏற்படுத்தும்.. உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் பொது உடன்பாட்டின்படி வினியோகிக்கப்படும். சுருக்கமாக இதை பொதுவுடைமை அல்லது கூட்டு உடைமை’ என்று சொல்லலாம்.

தனியார் சொத்துடைமையை சமாதான முறையில் ஒழிப்பது சாத்தியமா?

தனியார் சொத்துடைமையைச் சமாதான முறையில் ஒழிப்பது நடைபெறக்கூடும் எனில் அது விரும்பத்தக்கதே. கம்யூனிஸ்டுகள் இதை எதிர்க்க மாட்டார்கள். ஆனால் கம்யூனிசத்தின் எதிராளிகள் முழுப் பலத்தோடு இருப்பவர்கள். அவர்கள் பாட்டாளிகளை ஒரு புரட்சி நோக்கி தள்ளுவர். ஒடுக்கப்படும் பாட்டாளி வர்க்கம் ஒரு புரட்சியை நோக்கித் தள்ளப்படுமானால், கம்யூனிஸ்டுகள் தங்கள் செயல்மூலம் பாட்டாளிகளுக்கு பாதுகாப்பாக நிற்பார்கள். சமாதான வழி desirable but not feasible என்பது எங்கெல்ஸ் தரும் விளக்கம்.

தனியார் சொத்துடைமையை ஒரே அடியில் ஒழித்துக் கட்டுவது சாத்தியமா?

ஒரே அடியில் சாத்தியம் இல்லை. கூட்டுடைமைச் சமுதாயத்தை உருவாக்கத் தேவையான உற்பத்தி சக்திகளை ஒரேயடியாகப் பெருக்குவது சாத்தியமில்லை. எனவே

தனியார் சொத்துடைமை ஒழிப்பும் ஒரே அடியில் சாத்தியமில்லை. பாட்டாளி வர்க்கப் புரட்சி, இன்று நிலவும் சமுதாயத்தைப் படிப்படியாக மாற்றியமைக்கும். இங்கு after Revolution Evolution என்பது சொல்லப்படுகிறது. புரட்சி unlimited என்பது பேசப்படவில்லை.

இந்தப் புரட்சியின் திசைவழி எதுவாக இருக்கும்?

திசைவழி ஒரு ஜனநாயக அரசமைப்பை நிறுவுவதாக அமையும். நேரடியாகவோ மறைமுகமாகவோ, பாட்டாளி வர்க்கத்தின் மேலாதிக்கம் அமையும். இங்கு ஜனநாயகம் என்பது, தனியார் சொத்துடைமைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பாட்டாளிவர்க்கத்தின் வாழ்க்கைத்தரத்தை உறுதிப்படுத்துவதற்குமான ஒரு வழிமுறையாக பயன்படுத்தப்படும்.

பாட்டாளிவர்க்க அரசாங்கம் செய்யவேண்டிய சில நடவடிக்கைகள் எவையாக இருக்கும்?

1. வாரிசு சொத்துரிமை ஒழிக்கப்படும்

2. நிலவுடைமை இருக்காது. வாடகைமுறையில் பயன்படுத்தவழியிருக்கும்

3.முற்போக்கான வரிவிதிப்பு

4. தேசிய வங்கி முறையில் கடன்கள்

4.போக்குவரத்து, வர்த்தக முறைகள் நாட்டுடைமை

5.கட்டாய உழைப்பு

6.இலவசக் கல்வி- பொதுப்பள்ளி, கல்வியை பொருள் உற்பத்தியுடன் இணைத்தல்

7.கிராம நகர நம்பிக்கையிழப்பு மற்றும் பகைமைகளை அகற்றல்

8.ஆலை உற்பத்திகருவிகள் விரிவாக்கம்- தரிசு நில மேம்பாடு

9.உழைப்பு அனைவரின் கடமை

10.விவசாயத்தை தொழில் துறையுடன் இணைத்தல்

11. குழந்தை உழைப்பு ஒழிப்பு

மேற்கூறிய சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை மார்க்ஸ் எங்கெல்ஸ் புதிய சமூகத்திற்கான புதிய பாட்டாளி அரசாங்கம் செய்யக்கூடியவைகளாக முன்வைத்தனர்.

இந்தியாவில் விடுதலை கிடைத்த காலத்தில் பிரிட்டனில் இருந்த 'லேபர் பார்ட்டி' 1948ல் கம்யூனிஸ்ட் அறிக்கையின் நூற்றாண்டை கொண்டாடியது. மேற்கண்ட பல நடவடிக்கைகளை தங்கள் கட்சி எடுத்துவிட்டதாக அக்கட்சி உரிமைப் பாராட்டியது. மார்க்ஸ்-எங்கெல்ஸ் பேசிய பல அம்சங்களை நாங்கள் செய்திருந்தும் எங்களை மார்க்சியர்கள் ஏன் சோசலிஸ்ட்களாக ஏற்கவில்லை என கேள்வியும் அக்கட்சியினர்

எழுப்பினர். விடுதலைக்குப் பின்னர் நேருவும் கூட தன் அரசாங்கம் சோசலிச திசைவழியில் செல்வதாகவே தெரிவித்தார். ஆனால் இங்கு மார்க்சியர்கள் அதை ஏற்கவில்லை. புரட்சி என்பதே கட்டுமானமல்ல. கட்டுமானம் என்பது புரட்சிக்கு பிந்தி நடைபெறுவது என நேரு பேசினார்.

பொதுப்பட சொத்துடைமையை ஒழிப்பதல்ல, முதலாளித்துவ சொத்துடைமையை ஒழிப்பதே சோசலிசத்திற்குரிய சிறப்பியல்பு. சொத்தானது அதன் தற்கால வடிவில் மூலதனத்திற்கும் கூலியுழைப்பிற்கும் இடையிலான பகைமையை அடிப்படையாகக் கொண்டதாகும். மூலதனம் தனியாளின் சக்தியல்ல, சமூக சக்திகொண்டது என்பது பொதுவாக மார்க்சியரிடம் கிடைக்கும் விளக்கம்.

முதலாளித்துவ உற்பத்திமுறையில் ஊதியம் பிழைத்துவாழும்நிலை அளவிற்கு வைக்கப்படுகிறது. குறைந்த ஊதியத்திற்கு போட்டியின் காரணமாக உழைப்பாளர் சந்தையில் கிடைக்கின்றனர். இந்த ’iron law of wages’ மூலம் பெரும் சுரண்டலுக்கு உழைப்பாளர் உள்ளாக்கப்படுகின்றனர். சுரண்டலால் உபரி மதிப்பு கிடைக்கிறது. உபரிமதிப்பை அதிகரிக்க முதலாளிகள் நடவடிக்கைகள் எடுப்பர். இந்த முரண்பாடு எதிர்வினையாக தொழிலாளிவர்க்க உணர்வை அதற்கான அமைப்புவடிவங்களை உருவாக்குகிறது. பாட்டாளிகளின் பலம் அதிகரிக்க முதலாளித்துவத்திற்கு சவக்குழி தோண்டப்படும். உற்பத்தி சாதனங்கள் தொழிலாளர் கைகளுக்கு மாறும். அதை அவர்கள் சோசலிச முறைகளில் நிர்வகித்து அனைவருக்குமான நல்வழிகளை உருவாக்குவர் என மார்க்சியர் பேசுவர்.

சோசலிசம் குறித்த பலவகை உரையாடல்கள் இன்றும் நிலவிவருகின்றன. கற்பனாவாத சோசலிசம் என வகைப்படுத்தப்பட்ட ராபர்ட் ஓவன், சார்லஸ் ஃபூரியர், செயிண்ட் சைமன், மார்க்சியர்களான லெனின்வகை சோவியத், மாவோவகை சீனம் , யூகோஸ்லாவிய டிட்டோ, வியத்நாம் ஹோசிமின், பிடலின் கியூபா என கட்டுமான மாதிரிகள் குறித்து பேசப்பட்டுவருகின்றன. மார்க்சிய கொள்கை எனப்பார்த்தாலும் பலவகை சிந்தனைப்பள்ளிகள் உரையாடுவதை நாம் பார்க்க முடியும்.

சி இ எம் ஜோட் முன்வைத்ததை நாம் பார்க்கலாம்- Socialism is like a hat that has lost its shape because everybody wears it. சோசலிச தொப்பியை ஒவ்வொருவரும் அணிவதால் தொப்பி தன் வடிவம் இழந்துவிடுகிறது. ரஸ்ஸல் பல்வேறு உரையாடல்களின் அனுபவங்களைக் கணக்கில்கொண்டு socialism a tendency rather a strictly definable body of doctrine எனக் குறிப்பிட்டார். காந்தி தனது விளக்கமாக Socialism is a beautiful word and so far I am aware, in socialism all members of society are equal none low and none high என்றார்.

சோவியத் அனுபவத்திற்கு பின்னர் வந்த உரையாடல்கள் சிலவற்றில் கீழ்கண்ட கேள்விகள் எழுந்தன. சோசலிசம் என்பது முழுமையான அரசு வியாபிப்புதானா? பொருளாதாரமுறை துவங்கி தனிநபர் ஈறாக அனைத்திலும் அரசு கட்டுப்பாடுதான் சோசலிசமா? இந்த கேள்விகளின் பின்னணியிலும் காந்தியின் சோசலிச பார்வையை பார்க்க வேண்டியுள்ளது.

II

இந்திய மக்களின் அரசியல் பொருளாதார சமூக சூழல்களை உள்வாங்கி அகிம்சை, ஒத்துழையாமை சத்தியாக்கிரகம், உண்மை- கடவுள், தர்மகர்த்தாமுறை, சோசலிசம் போன்றவற்றிற்கான விளக்கங்களை காந்தியடிகள் தந்தார். அவர் நடைமுறைக்கு முன்னுரிமை தந்தவர். எனவே அவரை இசம் சார்ந்து அதில் வைத்து பேசுவது கடினமாக இருக்கும். அவர் பழமைவாதியாக தெரிவார்- அனார்க்கிஸ்ட் ஆகவும் காணப்படுவார். முதலாளித்துவவாதி எனவும் அதே நேரத்தில் புராதன கம்யூனிஸ்ட் ஆகவும் தெரிவார். He belongs to all these camps and none என்கிற வரையறையைத்தான் நாம் எடுத்துக்கொள்ள நேரும்.

மத அடிப்படையிலான நன்னெறிகள் என்பதை அடித்தளமாக கொண்டு பாதிக்கப்பட்டவர்களின் துயர்துடைக்கும் அரசியல் சமூக செயல்பாடுகள் என்பதை காந்தி அமைத்துக்கொண்டார். வைஷ்ணவ சிந்தனைகள், ஜைன புத்தமத சிந்தனைகள், பகவத்கீதை, உபநிடதங்கள், மலைப்பிரசங்கம், டால்ஸ்டாய், ரஸ்கின், தோரோ ஆகியவர்களின் சிந்தனைகளே அவரை ஆட்கொண்டன. தனது செயல்களை இவற்றின் துணையோடுதான் அவர் சரிபார்த்துக்கொண்டு பயணித்தார்.

ஜைனத்தின் முக்கிய 5 விரதங்களாக அகிம்சை, வாய்மை, கள்ளாமை, பிரமச்சரியம், அவாவுறுத்தல் (Ahimsa, satya, Asteya, Brahmacharya, aparigraha) என்பதை அவர் தன் ஆசிரம விதிகளின் பகுதியாக இணைத்து அனுசரித்தார். ஈசா உபநிடதத்தின் ‘பணம் யாருடையது? அதற்காக ஆசைப்படாதே’ வாக்கியங்களில் சோசலிசம் பேசப்படுவதாக காந்தி உணர்ந்தார். ஆனால் மார்க்சியர்களால் இந்தப் பார்வையை ஏற்கமுடியாது.

எவ்வளவு கீழான மனிதர் என்று பார்க்கப்படுபவருக்கும் வாழ்வுண்டு என்பதை உணர்த்தியவர் புத்தர். காந்தியின் சர்வோதய சிந்தனையில் அகிம்சை அனுசரிப்பில் புத்த சிந்தனையின் தாக்கத்திற்கு இடமுண்டு. ஏசுவின் மலைபிரசங்கம் அவரின் இதயத்திற்கு நெருக்கமாக இருந்தது.

டால்ஸ்டாய் Kingdom of God ல் ’வாழ்வின் அர்த்தம்’ கடவுளின் ராஜாங்கம் அமைப்பதே என தெரிவித்தார். அதை அன்பின் வழிப்பட்டே கட்டமுடியும் என்பது அவரது நம்பிக்கையாக இருந்தது. குதிரையின் மீது சவாரி செய்துகொண்டே அதன் மீது பரிதாபப்படுவது குறித்து அவர் பேசினார். பரிதாபப்பட்டால் உடன் அதிலிருந்து இறங்கி நடக்க ஆரம்பிக்க வேண்டும் என்பதே வழி என்றார். இதை சுரண்டல் என்பதற்கான அருமையான குறியீட்டு மொழியாக புரிந்துகொள்ளலாம்.

“எப்படி தனிமனித உடலின் பாகங்கள் அனைத்தும் சமமோ அப்படித்தான் சமூகத்தில் அனைத்து உறுப்பினர்களும் சமம் என புரிந்துகொள்ளவேண்டும். இதுதான் சோசலிசம். மனிதர்கள் எப்படிப்பட்ட திறமைகளுடன் இருக்கவேண்டும் என்பதை சமூகத்தால் துல்லியமாக வரையறுக்கமுடியாமல் போகலாம். ஆனால் வாய்ப்புகளில் சமத்துவம் என்பதை அதனால் அனுசரிக்கமுடியும்” என்கிற விளக்கம் காந்தியிடம் இருந்தது

தன்னை நடைமுறை இலட்சியவாதி என அழைத்துக்கொண்ட காந்தி உடல் உழைப்பிற்கும், மூளை உழைப்பிற்கும் உள்ள வேறுபாடுகளை கொண்டாடும் சமூக மதிப்பிடுகளை நேராக்குவதில் ('equalisation of status') செலுத்திய ஊக்கம் அளவிடமுடியாதது.

காந்தியடிகளுக்கு மேற்குவகைப்பட்ட சோசலிச உரையாடல் என்பது இறுதியான வாசகங்கள் அல்ல. அவர் கீழைத்தேய சமூகங்களை உன்னிப்பாக கவனித்து இங்கு சோசலிச உரையாடலை- அதற்கான சமூக கட்டுமானத்தை செய்யவேண்டும் என விழைந்தார். வளர்ச்சி என்பதை நன்னெறிகளில் அல்லாமல் டாலர்களில் மட்டுமே பார்ப்பதை, சுயநல பெருக்கத்தை பெரும் வீழ்ச்சி என அவர் பார்த்தார். சோசலிசம் புத்தக வழியிலானதல்ல- அகிம்சா வழியிலானது என்றார்.

தனியார் சொத்துரிமை என்கிற முறையை போல்ஷ்விக்குகள் ஒழிக்க விரும்புகின்றனர். சொத்தின்மை- சொத்தில் பற்றின்மை என்பது அருமையான பொருளாதார நெறிதான். ஆனால் ஒவ்வொருவரும் அதை தாமே உணர்ந்து கைக்கொள்தல் நலமானது. போல்ஷ்விசத்தில் இந்த நடைமுறை அடக்குமுறை மற்றும் கட்டாயப்படுத்தும் வழியில் செய்யப்படுகிறது. அரசு சொத்துரிமை கட்டாயமுறையில் கொண்டுவரப்படுகிறது என்று போல்ஷ்விக் பற்றிய புரிதலையும் , விமர்சனத்தையும் காந்தியிடம் பார்க்கமுடிகிறது.

யாரிடம் முதலில் மனமாற்றம் ஏற்படுகிறதோ அவருடன் சோசலிசம் ஆரம்பமாகட்டும் என்பார் காந்தி. பிரசங்கம் செய்யலாம்- கட்சிகள் அமைக்கலாம். நம் வாழ்க்கைமுறையை மாற்றிக்கொள்ளாமல் இருந்தால் வேதாந்தம் போல் பேசிக்கொண்டிருக்கலாம். இலக்கு நம்மைவிட்டு தள்ளிப் போய்க்கொண்டுதான் இருக்கும். சோசலிசம் விரும்புவோர் மாற்றத்தை தன்னிடமிருந்து தொடங்கவேண்டும் என காந்தி அறிவுறுத்துவதைக் காணமுடியும்.

ரஸ்கினின் Unto the Last யை காந்தி மந்திரசக்திகொண்ட நூல் எனக் குறிப்பிட்டிருந்தார். அதிலிருந்து அவர் மூன்று முக்கிய பாடங்கள் அல்லது கருத்தாக்கங்களை அவர் எடுத்துக்கொண்டார்.

- The Good of the individual is contained in the good of all.
- That a lawyers work has the same value as the barbers' in as much as all have the same right of earning their livelihood from their work •
- That a life of labour is the life worth living.

முதல்கோட்பாடு அனைவரின் நலன் என பேசினால் அடுத்த இரண்டும் அதற்கு துணைநிற்கவேண்டியனவாக இருப்பதைக் காணலாம். சர்வோதயாவும் சாதிபேதமற்ற வர்க்கபேதமற்ற சுரண்டலில்லாத சமூகம் என்பதையே கனவாக முன்வைக்கிறது. சர்வோதயா 'emancipation of all' எனப் பேசுவதால் அது 'supreme revoultionary idea' என வினோபாபாவே வாதாடினார். பொருளாயத நலன்கள் என்பதை மட்டும் முன்வைத்து சமூக புனர் நிர்மாணம் செய்யமுடியாது. அதற்கு மனித கட்டுமானமும் அவசியம். அதை சர்வோதயா சொல்கிறது என்பது அவரது விளக்கம்.

திறமைக்கேற்ற உழைப்பைத் தருவது, தேவைக்கேற்ப பெறுவது குறித்து காந்தி சொல்லிவிடுகிறார். இது ஒருவகையான கம்யூனிச சமுதாய புரிதல்தான். ஆனால் காந்தி அவசியமான தேவைகள் என்பதை வரையறுத்து சொல்லிவிடுகிறார். உணவு, உடை, உறையுள், கல்வி, மருத்துவம் என்பதாக அவை செல்கின்றன. பொருளாதார சமத்துவத்தின் அடிப்படையை காந்தியடிகள் ஏற்றாலும் அத்துடன் சமூக சமத்துவம் என்பதை வலியுறுத்துபவராகவும் இருக்கிறார். வாழ்க்கை பிளவுபடாதது (Integrated and Indivisibility of Life) என்கிற புரிதலே மேலானது என காந்தியடிகள் எழுதினார். உலகின் இராஜ்யமே கிடைத்தாலும் தீண்டடப்படாதவர் நலன்களை விட்டுக்கொடுக்க முடியாதென்றவர் காந்தியடிகள். மார்க்சின் பார்வையும் சுதந்திரம் பிளவுபடாதது என்பதாகவே இருந்தது.

பெரும்பான்மை உழைக்கும் மக்கள் சுரண்டலிருந்து விடுதலைப் பெறும் சோசலிச முறையை மார்க்சியர் பொதுவாக முன்வைத்தனர். பாட்டாளிவர்க்க புரட்சி என்கிற வர்ணனையாக அதைப்பேசினர். காந்தி 'doctrine of greatest good of all' என சர்வோதயாவை முன்வைத்தார். காந்தியின் சர்வோதயா அனைவரின் நலன் என்பதை முன் நிறுத்தியது.

தர்மகர்த்தா முறையை சோசலிசதிசை நோக்கிய மாற்றாக அவர் முன்வைத்தார். தங்களுக்கு அவசியமான தேவை என்பதைத்தவிர அதிகப்படியான செல்வத்தை சமூகத்திற்குரியது- அதற்கு டிரஸ்டி என்கிற நினைவுடன் சாதாரண உழைக்கும் மக்கள் வாழ்க்கை முறைக்கு பணம்படைத்தவர்கள் தங்களை கீழ் இறக்கிக்கொள்ளவேண்டும் என அவர் விரும்பினார்.

கீழிலிருந்து கட்டுமானம் (Bottom up) எனச் சொல்லி காந்தி இதை விளக்கினார். மக்கள் தங்கள் கிராமத்திலிருந்து இதை அமுல்படுத்த துவங்கினால் சாத்தியமானதாகும். 'Stautory Trusteeship' அரசாங்க ஒழுங்குமுறையுடன் கூடிய சட்டப்படியான தர்மகர்த்தாமுறை என்பதை அவர் முன்மொழிந்தார். இங்கும் வாரிசு உரிமை என்பது கடமை சார்ந்து வருவதே தவிர பிறப்பால் மட்டுமே பெறும் உரிமையாகாது . வன்முறை மூலம் சொத்து பறிமுதல் சமூகத்திற்கு பயனளிக்காது என்பது அவரது திடமான கருத்தாக இருந்தது.

“தர்மகர்த்தாமுறைப் பற்றி நான் சொல்வதை நடக்காது வெறும் கனவு என விமர்சிக்கிறார்கள். அது நடவாமல் போகலாம். ஆனால் சோசலிஸ்ட்கள் கனவு மாத்திரம் நிச்சயம் பலிக்கும் என எப்படி உத்தரவாதம் சொல்லமுடியும். முதலாளிகள் சுரண்டுகிறார்கள் என பல்லாண்டுகளாக பிரச்சாரம் செய்தும் சோசலிசம் வந்துவிடவில்லை. மனிதர் மனத்தை மாற்றமுடியும் என்கிற நம்பிக்கை போனதால் தான் மேற்கித்திய சோசலிசக் கொள்கை தோன்றியுள்ளது” என காந்தி பேசியதைப் பார்க்கிறோம்.

தர்மகர்த்தா கொள்கை என்பதையும் காந்தி விரிவுபடுத்தினார். அது சொத்துக்குரியது மட்டுமல்ல. மேலான அம்சங்கள் எனக் கருதப்படுகின்ற அனைத்திற்கும் உரியது. தன்னிடம் மிகுந்து இருப்பதாக கருதும் எதற்கும் அவன் தர்மகர்த்தா என்கிற மனோபாவம் என அதை விரித்து காந்தி பொருள்தருவார். (Whatever talents, physical strength, wealth or other capacities a person might possess, he should tkae them as having been given to him as a trustee,

for the benefit of the world. loka sangraha- accommodation and adjustment of every one or the total well being of all.) இதை எவ்வாறு நிராகரிக்கமுடியும் என கேட்கிறார் வினோபாஜி.

லூயி பிஷர் காந்தியிடம் உங்கள் சோசலிசத்தின் அர்த்தம் யாது என வினவியபோது 'கடையனுக்கும் கதி மோட்சம்' என்பதே என பதில் அளித்தார் காந்தி.

சரோஜினிநாயுடுவின் மகன் பாபா உட்பட இளம் கம்யூனிச பற்றாளர்கள் காந்தியிடம் பலகேள்விகளை எழுப்பினர். காந்தியின் பதில் இவ்வாறாக அமைந்தது. உழைக்காமல் சௌக்கியமாக வாழ என்ன நியாயம் இருக்கிறது? ஒரு நியாயமும் இல்லை. பிறவியில் அனைவரும் சமமானவர்தான். ஆனால் திறமைகள் மாறுபடுகின்றன. சம்பாதிக்க சாமர்த்தியம் உள்ளவர் தருமகர்த்தாபோல் வாழக் கற்க வேண்டும். உணவிற்காக உழைக்க வேண்டும் என்ற விதியைப் பின்பற்றினால் சமூகம் அமைதியான புரட்சியைக் காணும். எந்த அமைப்பிலும் சோம்பேறித்தனத்திற்கோ, கடமையை செய்யாமல் தப்புவதற்கோ இடமிருக்கக்கூடாது. பரஸ்பர சேவைக்காக போராடுவதுதான் மனிதனின் வெற்றி. அப்போது மிருக ஆட்சி இல்லாது மானுட ஆட்சி தோன்றிவிடும்.

புத்தரைப் பார்க்க வாய்ப்புகிடைத்தால் தியாகத்தைவிட உழைப்பின் தத்துவத்தை நீங்கள் ஏன் போதிக்கவில்லை என அவரைக் கேட்கத் தயங்க மாட்டேன் . துக்காராம், ஞானதேவர் போன்ற மகான்களைப் பார்த்தாலும் அதையேதான் சொல்லுவேன் என்றார் காந்தி. இக்கருத்து ஹரிஜன் நவம்பர் 2 1925ல் வெளியானது.

எந்தச் சொத்து நியாயமாக அல்லது அநியாயமாக சம்பாதிக்கப்பட்டது என்பதை எவர் தீர்ப்பிடுவது? இந்தக் கேள்வியை அவர் 1936 ஆகஸ்ட் 1 ஹரிஜனில் எழுப்பியிருந்தார். உடைமை சொத்தெல்லாம் திருட்டு என்றால் அனைவரும் அதை கைவிடவேண்டும். அப்படிக் கொடுத்துவிட்டோமா? என்பது அவரது கேள்வி.

பொருளாயத முன்னேற்றம் வந்தால் தார்மீக முன்னேற்றமும் வந்துவிடும் என்பதை காந்தி ஏற்க மறுத்தார். பெரிய அளவில் உற்பத்தி செய்வதை எதிர்க்கிறீர்களா என்கிற கேள்வி அவரிடம் வைக்கப்பட்டபோது ஒருபோதும் அப்படி கூறியதில்லை என்ற பதில் காந்தியிடமிருந்து வெளிப்பட்டது. என்னைப்பற்றிய பல மூடநம்பிக்கைகளில் இதுவும் ஒன்று என்றார் காந்தி. கிராமவாசிகள் உற்பத்தி செய்யமுடிந்தவற்றில் பேரளவு உற்பத்தி எனச் செய்வதை எதிர்ப்பதாக அவர் தெரிவித்தார்.

நாம் ஒவ்வொரு செயலிலும் நடந்துகாட்ட ஆரம்பிக்கும்போது சோசலிசத்திற்கு யாரையும் மாற்றவேண்டிய பணி என தனியாக ஒன்றில்லாமல் போகும். நடந்து காட்டுதலே பணியாக இருக்கும் என்கிற நீண்ட விளக்கத்தை அந்த இளைஞர்கள் பெற்றனர்.

சோசலிசம் குறித்து மகாத்மாவின் கருத்துக்களை பியாரிலால் வெளிப்படுத்தியதை சுருக்கமாக பார்க்கலாம்.

- சமூகத்திற்கு பயனளிக்கும் உடலுழைப்பை செய்யும் கடமையிலிருந்து எவருக்கும் விலக்கல்ல- உடல் உழைப்பில்லாதவர் சாப்பிடவேண்டாம் .
- உடல் உழைப்பானாலும்- மூளை உழைப்பானாலும் ஊதிய சமத்துவம் வேண்டும்.

- சோசலிசம் குறித்து பேசி கனவு மட்டும் காண்போர்க்கு தான் சோசலிஸ்ட்டாக தெரியாமல் இருக்கலாம். திக்கற்றவர்களுடன் வாழ்வது, தாழ்ந்த நிலையிலிருப்பவர்களுடன் தம்மை ஒன்றுபடுத்திக்கொண்டு அவர்களது கஷ்டங்களை தாமும் பகிர்ந்து கொள்ளத்தெரிந்த தன்னை சோசலிஸ்ட் என்றே அழைக்கவேண்டும் என காந்தி கருதினார்.
- எல்லோரும் மாறுகிறவரை- எல்லாவற்றையும் மாற்றுகிறவரை என சொல்லிக்கொண்டு சுலப வாழ்க்கை வாழ்வதை அவர் ஏற்கவில்லை.
- ஒருவரின் சொத்தானாலும் ஆற்றலானாலும் தான் தர்மகர்த்தா என்ற புரிதல்தான் சோசலிசத்திற்கு அமைதியாக இட்டுச் செல்லும்பாதை என்றார். பிறர் சொத்தை பலவந்தமாக பிடுங்கிக்கொள்வது சோசலிசம் என்று விளக்கப்படுவதை அவர் ஏற்கவில்லை.

“ மார்க்சிற்கு இருந்த கல்வித் திறமை எனக்கு இல்லை. அது எனக்கு இருந்திருக்குமானால் , மார்க்ஸ் தத்துவத்தை மார்க்ஸைவிட இன்னும் நன்றாக எழுதியிருப்பேன்… மார்க்சின் முறையைத்தவிர வேறு முறை இல்லை - அது மட்டுமே சிறந்தமுறை என்பதை நான் ஏற்கவில்லை” என்று காந்தி சொன்னதும் பியாரிலாலின் பதிவாக உள்ளது.

மார்க்ஸ் குறித்த தன் மேலான மதிப்பீடுகளையும் காந்தி தந்துள்ளார். ” மார்க்ஸ் மனித வர்க்கம் முழுவதையும் ஒன்றாக கருதியிருக்கிறார். ஒடுக்கப்பட்டு கிடக்கும் ஏழைகளான உலகப் பாட்டாளிகளின் கட்சியில் தம்மை ஒருமைப்படுத்திக்கொண்டிருக்கிறார். இதுதான் மார்க்சின் உபதேசங்களை ஜீவனுள்ளவையாக்கியிருக்கிறது. ஆனால் இப்படி செய்திருப்பது அவர் மாத்திரமல்ல. மார்க்ஸைக் குறித்து நாம் குறை கூறலாம். ஆனால் அவர் மிகப் பெரியவர் என்பதை யார் மறுக்கமுடியும்?. அவருடைய பொருளாதார தத்துவங்களை நான் ஒப்புக்கொள்வதில்லை. ஆனாலும் ஏழைகள் நசுக்கப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். ஏதாவது செய்துதான் ஆகவேண்டும். இதை மார்க்ஸ் அவர் வழியில் செய்ய முற்பட்டிருக்கிறார். அவருக்கு ஆற்றலும், படிப்பும், அறிவும் இருந்தன.”

காந்தியின் பொருளாதார கருதுகோள்கள் மிகவும் எளிமையானவை. எவரும் ஏற்றுக்கொள்ளும் எளிய வாழ்க்கைமுறைக்குரியவை அவை. தன்னிறைவு சுயதிருப்தி ஆகியவற்றின் அடிப்படையிலானவை. பொருளாதார சுதந்திரம் என்பது தேவைகளின் சுருக்கத்தில்தான் இருக்கிறது (Economic freedom is ability to minimize one’s needs). அவரது இலட்சிய சமூகத்தை சுயஆட்சி கொண்ட தனிநபர்களின் கூட்டுத்தொகுதி என புரிந்து கொள்ளலாம்.

காந்தியின் திட்டத்தில் 18 அம்சங்கள் இருந்தன. 1. மத ஒற்றுமை 2. தீண்டாமை ஒழிப்பு 3. மதுவிலக்கு 4. காதி பயன்பாடு 5. கிராமத்தொழில்கள் 6. கிராம சுகாதாரம் 7. அடிப்படைக் கல்வி 8. வயதுவந்தோர் கல்வி 9. பெண்கள் கல்வி மற்றும் மேம்பாடு 10. ஆரோக்கியம் 11. மாநில மொழிகள் 12. தேசிய மொழி 13. பொருளாதார சமத்துவம் 15. விவசாயிகள் நலன் 16.. தொழிலாளர் நலன் 17. தொழுநோயாளர் நலன் 18. மாணவர் மீதான அக்கறை

காந்தியம் மதம் - கடவுள் என்கிறது. வன்முறைகூடாது என்பதை நிபந்தனையாக்குவதால் காந்தியம் ஒத்துப்போகும் ஒன்றல்ல என மார்க்சியர் கருதலாம். அரசாங்கம் என இருந்தால் அது வன்முறையை இறுதியாக பயன்படுத்தியே தீரும். எனவே அதை எதிர்ப்பதற்கும் புதிய அரசு அதிகாரம் வருவதற்கும் வன்முறை தேவைப்படலாம். எனவே வன்முறை புரட்சி ஒன்றின் மூலம் பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசு என்கிறது மார்க்சியம்.

கடவுள் மறுப்பு கொண்ட சோசலிசம் மீது காந்திக்கு சந்தேகம் இருந்தது. மனிதனை எங்கே அது அழைத்துச் செல்லும் என்கிற கேள்வி இருந்தது. கடவுள்- சோசலிச இணைப்பு தேவை என அவர் கருதினார். வர்க்க போராட்டம் தவிர்க்கப்படவேண்டியது என்பதில் நின்றார். உண்மையில் போராட்டம் புரிதலுக்கும் அதன் இன்மைக்குமானதே என்றார். புரிதலின்மையை நாம் நீக்கவேண்டும் . மூலதனமும் உழைப்பும் ஒன்றுகொன்று நிரப்பிகளாக இருக்க வேண்டும்.

காந்தியின் பார்வையில் மனிதகுல மகிழ்ச்சிக்குரிய அடிப்படையான தேவைகள் என்பன :-

அ) கடமையின்பாற்பட்டு மனிதர்கள் இயங்குவது- பேராசை, அதிகாரம், இலாப நோக்கத்திற்காக இல்லாமல் செயல்படுதல்

ஆ) தன்னிடம் கூடுதலாக இருக்கும் அதிகாரம், சொத்து, கல்விப்புலமை, உடல்வலிமை போன்ற எதையும் தான் சமூகத்திற்கான டிரஸ்டி என்பதை உணர்ந்து செயல்படுதல். இதனை மூலதனமாக வைத்து சுரண்டாமல் இருத்தல்

இ) தங்களின் திறமைகளுக்குரிய நேர்மையான கணக்குடையவர்களாக இருத்தல்- தனது ஆகச்சிறந்ததை கொடுப்பதற்கு ஈடாக குறைந்தபட்ச அளவிலும், நியாய அடிப்படையிலும் தேவைப்படுவதை நுகர்தல்.

இந்த நிபந்தனைகளுடன் கூடிய மனித இயக்கம் மகிழ்ச்சியைத்தரும் என அவர் வாழ்ந்தார்.

காந்தியின் சோசலிசத்தை மார்க்சிய வகைப்பட்டு அளந்தால் அதை ஏற்பிற்கு உகந்ததாக சொல்லமுடியாமல் போகலாம். ஆனால் காந்தியின் மொழியில் அவரது நடைமுறை வாழ்வின் அடியொற்றிப் பார்த்தால் அதை விளங்கிக்கொள்வது கடினமான ஒன்றாக இருக்காது. ஆனால் நடைமுறைப்படுத்துவது கடினமானதாக இருக்கலாம். ஏனெனில் அது சோசலிசம் பேசக்கூடியவர் செய்யவேண்டிய நடைமுறையிலிருந்து - தன்னை மாற்றி தகவமைத்துக் கொள்வதிலிருந்து (transform) துவங்குகிறது. எனவே அந்த வகையில் அது கடினமான பயிற்சியாக இருக்கும்.

III

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் எனப் பேசிய மார்க்சியம் அரசுடைமை சார்ந்த உற்பத்தி பொருளாதாரம் என்பதை முன்வைக்கிறது. இந்த பாட்டாளி அரசும் தன்

சர்வாதிகாரத்தை எடுத்துக்கொண்டு அமுல்படுத்தி பின்னொரு காலத்தில் உதிர்ந்துவிடும் என அங்கு சொல்லித்தரப்படுகிறது.

சோசலிச கட்டுமானம் என்பதில் அரசு என்பது மைய அம்சமாக இருக்கும் என்கிற விளக்கத்தையே நாம் மார்க்சியவகைப்பட்டு பார்க்கிறோம். தனியார் கைகளிலிருந்து அரசாங்க கைகளுக்கு உடைமையும் உரிமையும் மாறுவதால் சோசலிச மதிப்புகளை உருவாக்க முடியுமா ? ஒரு எஜமானர்தான் உண்டு. தொழிலாளர்க்கு வேறு எந்த தேர்வும் கிடையாது. அரசின் கட்டளைகள்- அறிவுறுத்தல்கள் இறுதியானது என 'நியுகிளாஸ்' குறித்துப் பேசிய மிலோவன் டிஜிலாஸ் எழுதினார்.

மார்க்சியர்கள் சொல்வதுபோல முழுமையாக பொருளாதார உற்பத்திமுறையை அரசிடம் ஒப்படைத்துவிட காந்தி தயாராக இல்லை.

வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளுக்கான உற்பத்தியை கிராமங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளாதவரை அவைகளுக்கு சுதந்திரம் இருக்காது. முடிந்தவரை அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் கூட்டுறவு முறையில் இருக்கவேண்டும். விவசாய உற்பத்தியிலும் கூட்டு விவசாயமுறை மேலானது . கூட்டாக விவசாயம் பார்த்து வருவாயை பிரித்துக்கொள்வது என்பது நிலத்தை பலநூறாக பிரித்துக்கொண்டு தனித்தனியாக பார்க்கும் விவசாயத்தைவிட மேலானது என காந்தி தெரிவித்தார். கிராமத்தில் பொது மேய்ச்சல் நிலம், பால்பண்ணை, கால்நடை மருத்துவமனை என்பது இருக்கவேண்டும் என்பது அவரது அவா.

காந்தியிடம் அரசு என்பது ஆன்மா அற்ற எந்திரம் என்கிற பார்வை பலமாக இருந்தது. வன்முறையின் உருண்டு திரண்ட வடிவமாககூட அதை அவர் பார்த்தார். தனிமனித கௌரவம் என்பதன் அடிப்படையை உணரவேண்டும் என்கிற சரடு அவரிடம் ஓடியது. அரசின் 'ரெஜிமெண்டேஷன்' குறைவாகவும் தனிநபரின் சுதந்திரம் அதிகமாகவும் இருக்கவேண்டிய சமூகம் குறித்து காந்தி பேசினார்.

அரசியல் அதிகாரம் என்பதை முடிந்த முடிவாக காந்தியடிகள் ஏற்கவில்லை. மக்கள் தங்களை உயர்த்திக்கொள்ள உதவும் கருவிதான் அரசாங்கம் என்பது. அதிக அதிகாரமில்லா அரசே சிறந்த அரசாங்கம் என்பது தோரோவின் கூற்று. அரசாங்கத்தின் தலையீடு அதிகமில்லாமல் தங்கள் விவகாரங்களை திறம்பட மக்களால் நடத்திக்கொள்ள முடிந்த வாழ்வே ஜனநாயக வாழ்வு என காந்தி கருதினார்.

அரசற்ற ஜனநாயகம் ' stateless democracy' குறித்த பார்வையையும் காந்தி கொண்டிருந்தார். அவரது இலட்சிய அரசை கீழ்கண்டவாறு புரிந்துகொள்ளலாம்

1. முற்றுமுழுதலானது என்கிற கொள்கை ஏற்காமை

2. உடல் உழைப்பிற்கு மரியாதை

3. அனைவருக்குமான உயர் நன்மை

4. குறைந்த அளவிலான அரசின் செயல்பாடு

5. குற்றம் தண்டனை என்கிற அளவில் மட்டுமே ஒடுக்குமுறை

6. சிறைக்கூடங்கள் சீர்திருத்தக்கூடங்கள் என்கிற அணுகுமுறை

7. போலீசார் மக்களின் நண்பர்கள் என்கிற தன்மையை பலப்படுத்தல்

8. முடிந்தவரை வழக்குகளை பஞ்சாயத்து மட்டத்தில் தீர்த்தல்

9. சமூக நீதிக்கு உகந்த பொருளாதர நிலைமைகளை உருவாக்குதல்

10. தர்மகர்த்த கொள்கை சார்ந்த நடைமுறை செயல்கள்

11. வருவாய் முறைகளை மாற்றுதல்- மதுபானங்களிலிருந்து வருவாய் ஏற்காமை

12. உழைப்பவர்களுக்கான ஊதிய கூலி முறைமை

13. அடிப்படைக்கல்வி மேம்பாடு

14. உரிமைகளைவிட கடமை சார்ந்த சமூகம் கட்டுதல்

அரசு என்பதை மார்க்சியர்கள் உதிரவேண்டிய ஒன்று என சொன்னாலும் சோசலிச காலத்தில் முழுமையான அதிகாரமிக்க நிறுவனமாக வைக்க விரும்பினர். முதலாளித்துவ ஜனநாயகம் போலியானது என்றும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமே அசலான ஜனநாயகம் என்கிற உரையாடலை மார்க்சியர் தந்தனர்.

அரசு என்பது ஒரு வர்க்கத்தின் கருவி என்பதிலிருந்து மற்றொரு வர்க்கத்தின் கருவியாக மாற்றப்பட்டுவிடுவதால் அதன் வன்முறை கருவி எனும் விளக்கத்தை இழந்துவிடுகிறதா என்ற கேள்வியை பேணுதர்பிரதான் முன்வைக்கிறார். காந்தி இதையே வேறுவிதத்தில் குறிப்பிட்டார். அரசால் எப்போதும் தான் சுற்றிக்கொண்ட வன்முறை என்பதிலிருந்து வெளியே வரமுடியுமா என்பது அவரது சந்தேகமாக இருந்தது.

மார்க்சியம் காந்திய சோசலிச கட்டுமானத்தின் மிக முக்கிய வேறுபாடு உடனடியாக அரசை உதிரச் செய்யத்துவங்குவதில் இருக்கிறது என நிர்மல்குமார் போஸ் கூறினார். மார்க்சியம் அரசை பலப்படுத்தி பின்னர் அதை உதிரச் செய்வதற்கான காலத்தை ஒத்திப்போடுகிறது எனில் காந்திய சோசலிச சிந்தனை அதை துவக்கத்திலேயே பலமிழக்க செய்வது எனப் பேசுகிறது என்கிற விளக்கம் நிர்மல் போஸிடம் கிடைக்கிறது.

”Gandhi and the state” என்கிற கட்டுரையை காந்திய ஆய்வாளர் Anthony Parel எழுதியுள்ளார். காந்தியை சங்கரன் நாயர் போன்றவர்கள் குறிப்பிட்டதுபோல் முழுமையாக ’அராஜக- அனார்க்கியிஸ்ட்’ என சொல்லமுடியாதென்கிறார் பரேல். அரசு குறித்து காந்தியின் பார்வையில் ஏற்பட்ட வளர்ச்சியை அந்தோணி பரேல் தருகிறார்.

லெனின் எழுதிய ’அரசும் புரட்சியும்’ போல காந்தி தனி ஆக்கம் ஏதும் அரசு குறித்து எழுதவில்லை. ஆனால் அவரது Hind Swaraj ல் 1909லேயே அரசு குறித்து விவாதித்து இருந்தார். அதே போல் அவரது ’Constructive Program’ என்பதும் அவரது பார்வையை அறிய உதவும் ஆக்கம் என அந்தோணி பரேல் சொல்கிறார்.

'இந்திய சுயராஜ்யம்' என்பதில் அரசியல் சுயஆட்சி என்பதை பேசும் காந்தி சுயராஜ்யம் என்பதை அத்துடன் நிறுத்திவிடவில்லை. அதை 'Home rule' என்கிற அரசியல் ஆட்சியிலிருந்து ஒவ்வொருவரின் 'self rule' என்கிற சுயகட்டுப்பாடு- நெறி சார்ந்த அம்சத்திற்கு உயர்த்துகிறார். காந்தியின் பார்வையில் அரசு குறித்து விவாதித்த பரேல் நமக்கு சில முக்கிய அம்சங்களை தொகுத்து தந்துள்ளார்.

- 1909ல் காந்தி ஹோம்ரூல் என்றார்.

- 1920ல் நிதி, போலீஸ், இராணுவங்களை கட்டுக்குள் வைக்கும் அதிகாரம் கொண்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற ஆட்சி என்றார். இதில் அவர் அடக்குமுறை கருவியின் அமசங்களை உள்ளடக்கிய ஆட்சிமுறையைக் காட்டுகிறார்.

- 1931ல் முழு சுதந்திரம் எனப் பொருள்தரும் பூர்ண சுயராஜ்யம் எனப் பேசுவதை ஏற்கிறார்.

- 1947ல் 'surajya' என்கிற நல்ல அரசாக இந்தியா மலரவேண்டும் என்கிற விழைவை சொல்கிறார். இந்தியாவில் அமைக்கப்படும் அரசு- அரசாங்கம் வெற்றிகரமாக இருந்திடவேண்டும் என்கிற விருப்பம் அவரிடம் இருந்தது. எனவே அவர் விழைந்தது 'Not a spiritual swaraj by itself without the active presence of the Good state' என்பது பரேலின் ஆய்வாக இருக்கிறது.

காந்தி அரசு என்பதில் எவற்றை விரும்பவில்லை என்பதையும் பரேல் விவாதிக்கிறார். முதலில் 'aggressive state' என்கிற மேலாண்மை- நாட்டாண்மை அரசை அவர் ஏற்கவில்லை எனலாம். அவரது 'இந்திய சுயராஜ்யம்' என்ற ஆக்கத்தில் ஆங்கிலேயர் இல்லா ஆங்கிலேயர் ஆட்சி முறை, புலி இல்லாத புலியின் குணங்கள் என்பதை சுட்டிக்காட்டி அத்தகைய அரசு வேண்டாம் என்கிறார். அரசு என்பது soul force அல்ல body - brute force என்பதில் காந்திக்கு தெளிவு இருந்தது.

அனுராதா வீரவள்ளி 'இறையாண்மை' என்பது அரசிற்கு மட்டும்தானா என்கிற கேள்வியில் காந்தியை நமக்கு உணர்த்துவார். Individual – civil society- State sovereignty என்று அனுராதா விளக்கிச்செல்கிறார். அரசிற்கு மட்டும் இறையாண்மை என்பதுடன் காந்தி நிற்கவில்லை என நாம் புரிந்துகொள்ளலாம். காந்தியின் ஜனநாயகத்தில் 'Individual free from fear of death and want of power and so sovereign and the individual lives for the service of society- will sacrifice himself for others' என்பதை நோக்கி அனுராதா அழைத்துச் செல்வார்.

அரசு மதம் தொடர்பு குறித்து காந்தி தெளிவாக இருந்தார். இங்கு அவர் ஜின்னா சாவர்க்கர் போன்றவர்களை எதிர்கொள்கிறார். அரசிற்கும் மதத்திற்கும் நோக்கங்களிலேயே மாறுபாடு இருக்கிறது. அரசு Artha என்பதில் கவனம் கொண்டால், மதமோ Moksha என்பதை சொல்லித்தருவதாக இருக்கிறது. இரண்டிற்கும் வழிவகைகள் வெவ்வேறானவை.

’Indian nation was religiously pluralistic’ என்றே காந்தி கருதினார். வருகின்றவற்றை உள்வாங்கி கிரகித்துக்கொள்ளும் நாடாகவே இந்தியா இருந்துள்ளது. அப்படி இருக்கவும் வேண்டும். எவ்வளவு மனிதர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு வழிபாட்டுமுறைகள்- மதங்கள் கூட இருக்கலாம். ஒருவர் மற்றவரின் விஷயத்தில் தலையிடாமல் இருக்க வேண்டும் என காந்தி மிக வெளிப்படையாக எழுதினார். காந்தியின் புருஷார்த்தம் என்பது குறித்து தொடர்ந்து பரேல் எழுதிவருகிறார். தர்மா, அர்த்தா, காம மற்றும் மோட்சம்- ஒவ்வொன்றிற்கும் உரிய கடமைகள் இருப்பதை அவர் சுட்டிக்காட்டுவார்.

அடுத்து காந்தியின் முக்கிய பங்களிப்பு கீழ்நோக்கிய இயக்கம். சமஸ்கிருதம், பிராம்மண பாரம்பரியம் - கலாச்சாரம்தான் உயர்வு என்கிற மாயை அவரிடம் இல்லை. அதை ஏற்கவும் இல்லை. விவேகானந்தர்கூட ’மேல்நோக்கி செல்ல’ சமஸ்கிருதம் படி என அழைப்பவராக இருந்தார். காந்தியின் செயலோ எழுத்தோ பிராமணியம் மீதான நம்பிக்கை எதையும் உணர்த்தவில்லை. கிராம்சிய மேலாண்மை கருத்தாக்கத்தில் காந்தி பிராமண கலாச்சார மேலாண்மைக்கு எதிராக நின்றார் என்கிறார் ’சாதிக்கு எதிராக காந்தி’ எழுதிய நிஷிகாந்த்.

காந்தியின் அரசியல் தத்துவம் குறித்த விமர்சன ஆய்வு (Gandhi's Political Philosophy A critical examination by Bikhu parekh) என்கிற ஆக்கத்தை பிக்கு பரேக் எழுதியிருக்கிறார். அதில் ’Theory of state’ என்கிற பகுதியில் காந்தியின் அரசு குறித்த புரிதல்கள் ஒருபடித்தானதாக அமையவில்லை என்கிறார் பிக்குபரேக். காந்தியின் அரசு குறித்த விமர்சனம் அவரின் நவீன அறிவியல் குறித்த விமர்சனத்தின் பகுதியாகவும் இருக்கிறது- Ideally he preferred 'enlightened anarchy' என பரேக் எழுதுகிறார்.

காந்தி தனது கட்டுமானத்தை கீழ்கண்டவாறு விளக்கினார். இதை அந்தோணி பரேல் அவர்களும் எடுத்துக்காட்டியுள்ளார்.

பிரமிட் மாதிரியான அடிபெருத்தும் முனை கூம்பாகவும் உள்ள சமூகத்தை காந்தி கட்டுமான மாதிரியாக ஏற்கவில்லை. தனிமனித மாண்புகளை காக்கும் வட்டவடிவ வாழ்க்கை மாதிரியை அவர் காட்டினார். உள்வட்டத்தை நசுக்காத வெளிவட்ட வாழ்க்கை என அவர் படம்பிடித்தார்.

பிறரை தாழ்த்தவேண்டும் என செயல்படும் எவரும் தன்னை தாழ்த்திக்கொள்ளாமல் அதை செய்யமுடியாது. சுற்றிலும் வறுமைக்கொடுமையும், பாதுகாப்பின்மையும் இருக்கும்போது சிலர் மட்டும் சௌகரியமாக வாழ்ந்துவிடமுடியாது என்பதை உணரும்படி காந்தி வேண்டிக்கொண்டார். இதை மார்க்ஸ் பேசிய அந்நியமாதல் என்பதுடன் பொருத்திப்பார்க்க முடியும். கம்யூனிச அரசு வறுமை ஒழிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்ததை காந்தி உணர்ந்தார் என பரேக் எழுதியுள்ளார்.

சுதந்திரம் என்பதை பிறரை கொன்று அடையமுடியாது. வைஸ்ராய் குண்டு வெடிப்பில் தப்பிய நிகழ்விற்கு பின்னர் காந்தி எழுதிய ’கல்ட் ஆப் பாம்’ என்பதற்கு பகத்சிங் தோழரான பகவதி சரண் ’தி பிலாசபி ஆப் பாம்’ என பதில் ஒன்றை எழுதினார். அது அமைப்பின் தலைவர் என்ற பெயரில் வெளியானது. காந்தி அதையும் ’யங் இந்தியா’வில் வெளியிடுகிறார்.

காந்தி தனது அகிம்சை குறித்த நிலைப்பாட்டை விளக்கி சொற்பொழிவாற்றினார். வன்முறையால் சுயராஜ்யம் உருவாகாது- அழிவே மிஞ்சும் என்றார். சோசலிசம் ஸ்படிகம் போல் தூய்மையானது எனில் அதற்கு ஸ்படிகம் போன்ற தூய நடைமுறைகளும் அவசியமாகிறது. உண்மையற்ற வழிமுறைகளால் உண்மையை பெற இயலாது என்பதில் வலுவாக நின்றார்.

வழிமுறைகள் என்பன நமது சக்திக்குள் நிற்பவை. முடிவுகளை நாம் அறியமுடிவதில்லை. நமது அற்புத உணர்வுகளை முடிவுகள் என்பதற்காக நாம் இழந்துவிடக்கூடாது. மோசமான வழிமுறைகள் மோசமான முடிவுகளுக்கே இட்டு செல்லும் என அவர் எச்சரித்தார்.

வன்முறை வழியாக பாட்டாளிகள் ஆட்சி அதிகாரம் கிடைக்கப்பெறுமானால் அதைவிட கூடுதல் வன்முறையால் அதை அவர்கள் இழப்பர் என காந்தி கருதினார். ”எனது சோசலிசத்தில் முதலாளி- தொழிலாளி, நிலப்பிரபு- குத்தகையாளர் இடையிலான இணக்கம் இருக்கும். அது அகிம்சை வழிப்படி இருக்கும்” என்றார் காந்தி. ஆனால் மார்க்சிய மொழி இதை ஏற்பதில்லை. வேறுபட்ட வர்க்க நலன்கள் நிலவுவதால் இணக்கமும் ஒத்துழைப்பும் ஏற்படாது. மோதல் புரட்சி மூலமே பெரும்பான்மை வர்க்கமான பாட்டாளிகளின் ஆட்சி உருவாகி வர்க்கமற்ற இணக்க சமுதாயம் மலரும். வன்முறையா சமாதான வழியா என்பது எதிரி ஏந்தும் ஆயுதங்களைப் பொறுத்தது என்கிற பொதுப் புரிதலை நாம் அங்கு அறியமுடியும்.

கம்யூனிஸ்ட் புரட்சி என்பதில் சதி- இரகசிய ஆலோசனை என்பதெல்லாம் ஏற்கப்பட்ட வழிமுறைகளாகவே இருந்தன. இரகசியம்- துரோகம், திடீர் கொரில்லா தாக்குதல் என்பதெல்லாம் புரட்சிகரப் போரில் தவிர்க்கமுடியாதவை என்று அங்கு கருதப்படும். செகுவாரா போன்றவர்கள் இப்படிப்பட்ட கொரில்லா தாக்குதல் முறைகளை ’nobility’ என்று சொல்லிக்கொடுத்தனர். End justifies the means என்பதில் மார்க்சியர் உறுதியைக் காட்டினர். வர்க்க முரண்பாடுகள் conflict மூலம்தான் தீரக்கூடியவை என்பது அங்கு நம்பிக்கை. புரட்சிக்காரர்களான தங்களை சதிகாரர்கள் என விமர்சிப்பவருக்கு பதிலை லெனின் தந்தார். தங்கள் ஸ்தாபனங்களுக்கு ரகசியமுறை அவசியமானது, சதிகாரர்கள் என வரும் குற்றசாட்டுகளை பொருட்படுத்தி அஞ்சவேண்டாம் என்பது லெனினின் பதில்.

காந்தியின் நடைமுறை இவ்வாறு மார்க்ஸ்- லெனின் -செகுவாரா சொல்லித்தருவதற்கு நேர் எதிராக இருப்பதைக் காணமுடியும் காந்திக்கு மதமும் நெறிப்பண்புகளும் பிரிக்கமுடியாதவை. நம்மிடம் பண்புகள் வீழும் எனில் மதமும் தாழும் என்றவர் காந்தி. காந்திக்கு வழிமுறைக்கும் இறுதி இலக்கு இலட்சியத்திற்கும் பிரிக்கும் சுவர் ஏதுமில்லை. வழிமுறைகள் எப்படியிருந்தால் என்ன இலட்சிய ஈடேற்றமானால் சரி என்பதை அவர் ஏற்கமாட்டார்.

சுயராஜ்யம் என்பது உண்மையில் தன்னடக்கம்தான். ஆங்கிலேயரை குண்டு வீசி கொல்வதாலோ, பெரும் தொழிற்சாலைகளை நிறுவுவதாலோ சுயராஜ்யம் வந்துவிடாது. இலட்சியம் தான் இறுதி இலக்கு எனச் சொல்லி வழிமுறையில் எந்த விலக்கும் தரமுடியாது - விதையும் மரமும் போல அவற்றை பார்க்க வேண்டும் என்றார் காந்தி.

தலைமறைவாகயிருந்து செய்யும் நடவடிக்கைகளை காந்தி ஏற்கவில்லை. கோடிக்கணக்கான மக்களின் தலைவராக இருந்தால் எப்படி தலைமறைவாய் இருக்க முடியும் என்ற கேள்வியை அவர் எழுப்பினார். அப்படிப் போகவேண்டிய அவ்சியம் இல்லை. இரகசிய நடவடிக்கைகளால் சுயராஜ்யம் கட்டமுடியாது. நமது காரியங்கள் யாவும் பகிரங்க அழைப்புடன் பகிரங்கமாகவே நடைபெறவேண்டும் என அவர் நடத்திக்காட்டினார். பொதுமக்களுக்கு பயமற்று இருக்க கற்றுத்தரவேண்டும் எனில் அதற்கு இரகசிய வழிகள் உதவாது என்பதில் அவர் உறுதி காட்டினார்.

தொழிலாளரின் வெற்றியில்தான் முதலாளிகளின் வெற்றியும் அடங்கியுள்ளது. அவர்களின் தோல்வி முதலாளிகளின் தோல்வியும்கூட. இதுதான் தூய நியாயம் என காந்தி நினைத்தார். இருபக்க கடமை உணர்தல் - தொழிலாளர் தரப்பிலும் செய்யமுடியாத கோரிக்கைகளை வைப்பது சாத்தான் நியாயமாகவே இருக்கும். செய்ய முடிந்தவைகளை செய்ய முதலாளிகள் மறுப்பதும் சாத்தான் நியாயமே என்றார் காந்தி.

உழைப்பதற்கு தயங்குபவன் உண்பது உரிமையாகாது. Life of Labour is worth living. எனவே நாம் ஏதாவது வேலை செய்யவேண்டும். கடல்நீர் உப்புத்தன்மையை இழக்கமுடியாது என்பது போலவே தொழிலாளர் உழைப்பு எனும் குணத்தை இழந்துவிடமுடியாது.

முதலாளியும் குறைந்த ஊதியத்திற்கு யார் கிடைப்பார் என பார்க்கக்கூடாது. பிரதமரை, டாக்டரை, வக்கீலையெல்லாம் குறைந்த ஊதியத்திற்கு எனப் பார்த்தா தேடுகிறோம். அதேபோல் சிறந்த தொழிலாளிக்கும் ஊதியம் கொடுப்பதை பார்க்கவேண்டும். 'நிரந்தரமற்ற வேலை' எனில் அதற்கு நிரந்தரமாக வேலை பார்ப்பவர்களைவிட அதிக கூலி கொடுக்கவேண்டும். நிரந்தரவேலை எனில் நிர்ணயமான சம்பளம் பாதுகாப்பு இருப்பதால் சற்று ஊதியம் குறைவாகக் கூட இருக்கலாம்.

வர்த்தகம் என்றாலே ஏமாற்று என்பது மாறவேண்டும். உழைப்பை வாங்குகிறவர் அதை அக்கிரமமாக மலிவாக வாங்குவதற்குத்தான் போட்டி உதவி செய்கிறது. இதன் பலனாக பணக்காரர்கள் மேலும் பணக்காரர் ஆகிறார்கள். இது நாசத்தில் கொண்டுபோய்விடும். நீதியின் பொரூளாதாரமே உண்மையான பொருளாதாரம், நீதியையும் நியாயமானதையும் செய்ய மக்கள் கற்றுக்கொண்டவரையில் அவர்கள் ஆனந்தமாக இருப்பார்கள்.

தொழிலாளர் வகுப்புவாதத்தில் சிக்கிக்கொள்ளக்கூடாது என்ற அறிவுரையை காந்தி நல்கினார். இந்து என்றோ முஸ்லீம் என்றோ தொழிலாளர் பிரிந்து நின்றால் அவர்கள் பலவீனமடைவதுடன் நாட்டின் பலவீனமும் சேர்ந்தே நடந்துவிடும். எல்லாப் பாகுபாடுகளையும் சமப்படுத்திவிடுவதுதான் உழைப்பு என்பதை புரிந்துகொள்ள வேண்டினார் .

தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் போது தொழிலாளர் என்னெவெல்லாம் செய்யக்கூடாது என்றும் காந்தி சொல்லிக்கொடுத்தார். தொழிலாளர்களுக்கு உதவ வருபவர்கள் எதையெல்லாம் செய்யக்கூடாது என்பதையும் அவர் சொல்லத்தவறவில்லை. அதே போல் தொழிலாளர்களுக்காக நிற்பவர்கள் செய்யமுடிந்தவை எவை என்பதையும் காந்திஜி சொல்கிறார். தொழிலாளர்

வேலைநிறுத்தம் நடத்தும்போது முதலாளிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப் பற்றியும் காந்தி பேசினார்.

தொழிலாளர் பிரிந்து கிடப்பதைப் பற்றியும் காந்தியடிகள் பேசினார். முதலாளிகள் பணக்காரர்களாக இருப்பதற்கு தொழிலாளர்தான் காரணம் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டு அவர்களும் அதை சரியென கருதிகொள்கின்றனர். எனவே வேலைநிறுத்தம் என்பதற்கான நியாயம் உருவாகிவிடுகிறது. ராஜீய (அரசியல்) நோக்கங்களுக்காக வேலைநிறுத்தத்தை தூண்டிவிடலாம் எனக் கருதும் தலைவர்களுக்கும் குறைவில்லை. தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் தங்களின் நிலையை மேன்மைப் படுத்திக்கொள்வதற்காக மாத்திரமே இருக்கவேண்டும்.

பொருளாதார நன்மையை அடைவதற்காக நடக்கும் வேலை நிறுத்தங்களில் ராஜீய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுவது என்பது அந்தரங்கமாகக் கூட நோக்கமே இருக்கக்கூடாது. அத்தகைய கலப்பு நோக்கம் ராஜீய நோக்கத்தையும் நிறைவேற்றுவதில்லை எனக் காந்தி கருதினார். இதை மார்க்சியர்கள் ஏற்பதில்லை. இந்த வேலைநிறுத்தங்கள் தொழிலாளர்க்கான அரசியல் பயிற்சி என்பதே அங்கு பாடமாகும்.

IV

இந்திய மார்க்சியர்கள் காந்தி குறித்த மேலான மதிப்பீடுகளைக் கொண்டிருந்தாலும் அவரை கடுமையாக விமர்சிக்கவும் செய்தனர்.

எந்த இசத்தையும் பேசுகிற இறுதி இலட்சியங்கள் என்பதை மட்டுமே அடிப்படையாக வைத்து அதை மதிப்பிடவேண்டுமா? அதன் நோக்கங்களுக்கு அனுசரிக்கும் வழிமுறைகள் மதிப்பிடலுக்கு அப்பாற்பட்டவையா? கையாள விரும்பும் முறைகளின் சரி தவறு பற்றி பேசக்கூடாதா? வரலாற்றின் புதிய கட்டம் மார்க்சியம் கூறுவதுபோல்தான் கட்டாயம் நடக்கவேண்டுமா? வேறு எந்த வகையிலும் நடக்க இயலாது என்று விதியே தீர்மானித்துவிட்டதா போன்ற கேள்விகளை லோகியா மார்க்சியர்களிடம் எழுப்பினாலும் காந்திய தர்மகர்த்தா முறையை ஏற்கவில்லை.

மனிதனை சொத்துரிமை ஆசையிலிருந்து வெளியேற செய்வது என்பது மார்க்சியத்தின் பெரும் கொடை என்றார் லோகியா. மார்க்ஸ் கருத்துக்களில் தவறு இருந்தாலும் சொத்துரிமை ஒழிப்பு என்பது அதன் தனிச்சிறப்பு. சில காந்தியர்கள் பேசுவதைப் போல முதலாளித்துவ அமைப்பில் நல்லொழுக்கம், நீதிநெறி போன்றவற்றை இடம்பெறச் செய்யலாம் என்பது பகற்கனவு. ஆயிரக்கணக்கான முதலாளிகளை தர்மகர்த்தாக்களாக ஆக்கிடவும் இயலாது என்கிற காந்தியம் குறித்த விமர்சனப்பார்வையையும் சேர்த்தே முன்வைத்தார் லோகியா. முதலாளித்துவம் தங்குதடையற்று பொருளாதார ஏற்பாடாக நிலவவும் மற்றொருபுறத்தில் நல் ஒழுக்கம், நன்னெறி என்கிற கலாச்சார வாழ்வு எனச் சொல்வதும் அபத்தமே என்றார்.

காந்தியை முதலாளித்துவ பிரதிநிதி- ரீஆக்ஷனரி , எதிர்புரட்சிவாதி, சனாதனம் பேசுபவர், உழைக்கும் மக்களின் எழுச்சியை தடுத்து நிறுத்தியவர்- வர்க்க சமரசவாதி போன்ற விமர்சனங்களுக்கு மார்க்சியர்கள் உள்ளாக்கினர். இதில் சோவியத் - பிரிட்டிஷ் கட்சிகளின் பங்கும் இருந்தது. விடுதலைக்கு பின்னர் காந்தியை இடதுசாரிகள் மிக நிதானமாக பார்க்கத்துவங்கினர்.

லெனின் காந்தி இருவருக்கும் இன்று நிலவும் சமூகக் கொடுமைகளிலிருந்து மக்களை மீட்பது என்கிற பொதுவான இலட்சியம் இருக்கிறது. ஆனால் இதற்கு காரணங்கள் என்பதில் நவீன நாகரீகம்- தொழிற்புரட்சி மனிதனிடம் காணப்படும் தீங்கான செயல்கள் என்பதுடன் காந்தி நிற்கிறார். லெனின் உற்பத்திமுறை- நிலம் - முதலாளி- அசமத்துவம் என்பதைக் காண்கிறார் என டாங்கே 1921ல் மதிப்பிட்டிருந்தார்.

முதலாளிகளியோ நிலப்பிரபுக்களையோ அழித்து ஒழிப்பதல்ல பிரச்னை. அவர்களுக்கும் வெகுஜனங்களுக்குமான உறவை எவ்வளவு ஆரோக்கியமானதாக, தூய்மை நிறைந்ததாக மாற்றமுடியும் என்பதுதான் பிரச்னை என்பது காந்தியின் உரையாடல். இதை மார்க்சியர்கள் பொதுவாக சந்தேகத்துடன்தான் பார்த்தனர்.

காந்தி தான் முதலாளிகளின் கருவி என்கிற எண்ணமின்றி செயல்பட்டிருக்கலாம். ஆனால் அவரின் போராட்டமுறைகள் அதன் எல்லைகள் முதலாளிகளின் எண்ண ஓட்டத்திற்கு இசைவாக இருந்தது என்பது ஹிரன்முகர்ஜியின் மதிப்பீடு. காந்தியால் சுரண்டலுக்கு எதிராக பேசமுடிந்தாலும் நடைமுறையில் சுரண்டுபவர் நலன்களை தடுக்கமுடியவில்லை என்பது ஹிரன் முகர்ஜியின் ஆய்வு முடிவாகவுள்ளது.

காந்தியின் கட்டுமான திட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு போரில் மக்களை திரட்ட உதவியது என்பதை மறுக்க முடியாது. ஆனால் பாதுகாப்பான எல்லைக்குள் எல்லாம் என்றாக்கப்பட்டது. அவர் பூர்ஷ்வாக்களின் தலைவர் என நினைத்துக்கொள்ளாமல் காரியமாற்றியிருந்தாலும், அதன் நலன்களுக்கு உட்பட்ட வகையில் மக்களை திரட்டி போராடவைக்கும் அவ்வர்க்கத்தின் இயல்பிற்கு காந்தியின் போராட்டமுறை பொருத்தமாக போய்விட்டது. நேருவின் மூலம் இடதுசாரி இயக்கங்களையும் காந்தி தனது கட்டுக்குள் வைக்க விரும்பினார். நேருவும் அவரது மாஸ்டரின் அன்புசிறைக்குள் கட்டுண்டு நின்றார் என்கிற பார்வையையும் ஹிரன் முன்வைத்தார்.

காந்திஜி நடைமுறைகளின் விளைவுதான் என்ன ? நரகத்திற்கான பாதைக்கூட நல்லெண்ணங்களின்படி சமைக்கப்படுகிறது. காந்திஜியின் பிற்போக்கான சமூகப்பார்வையும் போராட்டக்குணத்துடன் சேர்ந்தே மக்களிடம் சென்றது. இந்தவகையில் அவர் லெனின் ஸ்டாலின் எனும் தனது காலத்திய மனிதர்களுடன் வேறுபடுகிறார் என இ எம் எஸ் நம்பூதிரிபாடின் விமர்சனம் செல்கிறது.

மக்களை திரட்டி விழிப்படையவைத்து போராட அழைத்துச் செல்லும் பூர்ஷ்வா தலைமைக்கு எல்லைகள் இருக்கிறது. இதற்கு மேல் செல்ல அவர்கள் விரும்புவதில்லை என்ற வரையறை இருக்கிறது.. ஒவ்வொருமுறையும் மாபெரும் மக்கள் இயக்கம் எழுந்தபோதெல்லாம் சுப்ரீம் தலைவரான காந்திஜி ஏன் தீண்டாமை போன்ற மைனர் பிரச்சனைகளில் கவனத்தை மாற்றுகிறார் என இ எம் எஸ் கேள்வி எழுப்பினார். காந்திஜி அரசியல் என்பதைவிட சமூக பிரச்னைகளை மேலானதாக பார்த்தவரா என கேள்வி

எழுப்பி இல்லை என்கிறார் இ எம் எஸ். புத்திகூர்மையான முதலாளித்துவ நலன்களுக்காக எப்போதும் செயல்பட்ட அரசியல்வாதி அவர் என்கிற கருத்திற்கு வருகிறார் இ எம் எஸ்.

1909ல் காந்தி எழுதிய இந்திய சுயராஜ்யம் மேற்கு நாகரீகம் மீதான கண்டனம் என புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் அறிக்கையின்படி அதை மதிப்பிட்டால் குட்டி முதலாளித்துவ சோசலிச பார்வை கொண்ட வர்ணனையாக இருக்கிறது என்றார் இ எம் எஸ். காந்தியின் மேற்கு குறித்த கண்டனம் ஒடுக்கப்பட்ட மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வாக இல்லை. காந்திஜி தான் ஒரு விசுவாச பிரிட்டிஷ் பிரஜை என சொல்லியும் நடந்தும் காட்டினார் என இ எம் எஸ் எழுதுகிறார்.

காந்திஜி ஒரு கருத்துமுதல்வாதி. நெறிசார்ந்த உண்மை, அகிம்சை, சந்ந்தோஷங்களை தேடாமை ஆகியவற்றிற்கு அவர் நின்றார். சுதந்திரம், ஜனநாயகம், அமைதி என்கிற அரசியல் அவரிடம் இருந்தது. சாதி ஏற்றத்தாழ்வு கூடாது, பெண்கள் முன்னேற்றம், மத ஒற்றுமை என்கிற சமூக மதிப்புகளுக்காக நின்றார்.' செமி ரிலிஜியஸ்' மொழியாடலை அவர் கையாண்டார். அவரை 'ரீஆக்ஷனரி' என எளிய முத்திரை குத்திவிடவும் முடியாது. ஏனெனில் அந்த ரீஆக்ஷனரிதான் மக்களை பெருமளவு திரட்டியவர். இந்த முரண் நாட்டின் உண்மையான அரசியல் சூழலின் உருவாக்கம் என்கிற சித்திரத்தையும் இ எம் எஸ் தருகிறார்.

மானுட முன்னேற்றத்தில் காந்தியடிகள் ஓரடி முன்வைத்து ஈரடி பின் இழுத்துவிடுகிறார் என எம் என் ராய் கருதினார். மகாத்மா காந்தி விழைந்த இந்து முஸ்லீம் ஒற்றுமை உருவாகவில்லை என்கிற விமர்சனம் ராயிடம் இருந்தது. அதேநேரத்தில் காந்தி தோற்ற இடத்தில் மற்றவர் வெல்லவும் முடியாது என்பதையும் அவர் புரிந்திருந்தார்.

தீர்க்கதரிசிகளின் வெளிப்பாடு போன்ற ஒன்றல்ல காந்தியம். அது நடைமுறை செயல் தத்துவம். காந்தி கருதுகோள்களில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளவில்லை. காரியங்களில் செயல்முறைகளில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டவர். எனவே காந்தியம் என்பது உடோபியனிசமல்ல. அதே நேரத்தில் காந்தியத்தால் அரசியலில் நெறி என்பதில் வெற்றி பெறமுடியவில்லை. நவீன கலாச்சாரத்தின் நெருக்கடிகளுக்கு அதனால் தீர்வை தரமுடியாமல் போனது. இன்றுள்ள சூழலில் காந்தியத்தை அமுல்படுத்துவது இயலாதாகியுள்ளது என்கிற முடிவிற்கு ராய் வந்தார்.

காந்தியின் 'return to village' என்பதையும் ராய் அம்பேத்கார் போலவே நிராகரித்தார். காந்தியின் பட்டினிப்போராட்டங்களை ஒருவகை கட்டாயப்படுத்தல் (a form of moral coercion) என்றே ராய் விளங்கிக் கொண்டார். பகுத்தறிவு சார்ந்த விவாத முறையில் பிறரை ஏற்க செய்யாமல் பட்டினிகிடந்து நிர்பந்தம் உருவாக்குவது- கட்டாயப்படுத்துவது ஏற்பிற்குரியதல்ல என்கிற விமர்சனம் ராயிடம் இருந்தது. காந்தியின் அரசியல் பகுத்தறிவு அரசியல் அல்ல- நெறிசார்ந்த அரசியல் என்றார்.

காந்தியம் என்பது ஒருவகை நோய்த்தன்மையை கொடுத்துவிடும் என்கிற கடும் விமர்சனமும் ராயிடம் இருந்தது. காந்தி வரலாற்றில் தீர்க்கதரிசியாக இடம் பெறமாட்டார். ஆனால் மக்களை அரசியல்ரீதியாக பெரும் விழிப்பிற்கு உள்ளாக்கியவர்

எனப் பெயர் பெறுவார். இந்திய மக்களின் உருவாக்கம்தான் மகாத்மா காந்தி என்றே ராயும் மதிப்பிட்டார். காந்தியின் அரசியல் முதிர்ச்சியற்றது, பழுதானது என்றெல்லாம் விமர்சிக்கலாம். அவர்கள் அவதாரம் அல்ல. அவர்கள் தங்கள் காலத்தின் சரியான பிரதிநிதியாக இருக்கிறார்கள் என்பதில் அவர்கள் மேன்மை தங்கியுள்ளது. காந்தி அப்படிப்பட்ட மேன்மையாளர். Greatness cannot be unlimited. நான் காந்தியை முட்டாள்தனமாக தொழுது வணங்கமாட்டேன். அவரின் உண்மையான மகத்துவம் போற்றுவேன் எனவும் குறிப்பிட ராய் தயங்கவில்லை.

காந்திக்கு எளிமையும், எளிய கருவிகளும் அவசியமாக தெரிந்தது. ஆனால் நம்மவர்களுக்கோ அது கேலிக்குரிய ஒன்றாகிவிட்டது. கம்யூனிஸ்ட் ஹோசிமின் கூட எளிமையான வாழ்க்கையைத்தான் காட்டுகிறார்.. கம்யூனிஸ்ட்களுக்கு அதில் கோட்பாட்டுத்தன்மை இல்லை. ஆனால் காந்திக்கோ அது கோட்பாடு சம்பந்தமானது (To communism simple living is not doctrinal, where as to Gandhism it is) . எளியவகை வாழ்க்கையே கூட புரட்சிகரமானதுதான் என்பது லோகியாவின் பார்வை.

V மார்க்ஸ் காந்தி சந்திப்பு புள்ளிகள்

மார்க்சியத்தின் மய்யமான அம்சம் முதலாளித்துவ சமூகத்தின் மீதான விமர்சனமும் அதனை அப்புறப்படுத்தி சோசலிச சமூகம் அமைப்பதற்கான புரட்சிகர நடவடிக்கையும்தான். இந்த விழைவை எவரும் ஏற்கமுடியும். மார்க்ஸ் இதன் பொருட்டு தன் நியாயத்தை labour theory of value- labour power- surplus value மூலம் முன்வைத்தார். புரட்சிகர மாற்றம் என்பதால் வன்முறை எழுவது தவிர்க்க முடியாததாகலாம் எனவும் அவர் கருதினார்.

காந்தி சர்வோதயா என பேசும்போது அனைவரின் நலன், சமச்சீரான வளர்ச்சி, ஒவ்வொருவரின் சீலம், அறிவார்ந்த குணவளர்ச்சியுடன் பொருளாதார வாய்ப்பு எனப் பேசினார். அவரின் சோசலிசம் என்பது தனிநபர் ஒவ்வொருவரின் சர்வாம்ச வளர்ச்சி என்பதை மையமாக கொண்டிருந்தது. பொருளாதார ஏற்பாடு என்பது தனிநபர்களின் நெறிவீழ்ச்சிக்கு வழியாகும் எனில் அதை ஒழுக்கமில்லாத பாவகரமான ஒன்றாகவே அவர் சித்தரித்தார்.

மார்க்ஸ் காந்தி ஒப்பீட்டில் அவரவர் அணுகுமுறையில், வர்க்க முரண்பாடு, வர்க்க உணர்வு, முதலாளித்துவ ஒழிப்பு, சோசலிசம், தர்மகர்த்தாமுறைக்கான வழிகளை பேசியிருக்கின்றனர். சோசலிசம் உருவாக்கத்தில் வர்க்கமோதல், வழிமுறைகளுக்கான முக்கியத்துவம், மய்யம் நீக்கிய அதிகாரமுறை என்பதில் அடிப்படையான வேறுபாடுகள் இருவர் இடையேயும் பார்க்கமுடிகிறது. இசம் என்கிற வகையில் சோசலிசத்திற்கான பல்வேறு விளக்கங்களும் வந்துள்ளன. வன்முறை தவிர்க்கமுடியாத வழி என்பதை காந்தி ஏற்கவில்லை.

மார்க்ஸ் , காந்தி இருவர் திட்டத்திலும் செயல்களிலும் 'பங்கேற்போர் தியாகம்' வலிந்து சொல்லப்படுகிறது. வன்முறையில் தியாகம் தேவைப்படலாம் என மார்க்சியம் பேசினால், காந்தி எதிராளிகளின் மனமாற்றத்திற்கு போராளிகளின் சுயவதைகளை self suffering பற்றி வலியுறுத்துகிறார். மார்க்சியம் காந்தியம் இரண்டிலும் இலக்கு

அடைவதற்குரிய உறுதிப்பாட்டிற்கான முக்கியத்துவம் இருப்பதை நம்மால் உணரமுடியும். காந்தியத்தில் வழிமுறைகளின் முக்கியத்துவமும் சேர்ந்தே வலியுறுத்தப்படும்.

அநீதிக்கு எதிராக சுயதுன்பங்களை ஏற்றுக்கொண்ட உலக அடையாளங்களாக மார்க்ஸ் காந்தி இருவருமே நிற்கின்றனர். அடித்தட்டு மக்களின் ஒடுக்கப்பட்டோரின் ஆதரவற்றவர்களின் உயர்வு என்பதில் மார்க்சியம் காந்தியம் பொதுப்புள்ளிகளை எட்டுகின்றன. ஆனால் அதை எட்டுவதற்கான பயணங்களில் வெவ்வேறு திசைப்படுகின்றன. அதேபோல அந்நியமாதல் நீக்கம் என்பது இருவரும் சந்திக்கும் மிக முக்கிய புள்ளி. இதற்கான உரையாடலை Unalienated life குறித்து அகில் பில்கிரேமி என்கிற சிந்தனையாளர் மிக நேர்த்தியாக தந்துள்ளார்..

சமூகம் ஒன்றில் எந்த ஒரு பிரிவோ தனிநபரோ நலிந்த நிலையில் அச்சமூகம் அந்நியமாதலுக்கு உள்ளான ஒன்றாகவே இருக்கும். Conceiving individual liberty in collective terms- non individualistic terms என்பது எங்கு பழக்கமாக இல்லையோ அச்சமூகம் அந்நியமாதலுக்குள்ளாகியிருக்கும். இது எப்போது நடந்திருக்கலாம் என காந்தியை முன்வைத்து அவர் சிந்தனைகள் ஊடாக பயணித்து அகில் பில்கிரேமி சில முக்கிய கேள்விகளை முன்வைத்தார். அவை நம் அனைவரின் சிந்தனைக்கான கேள்விகளாகவும் இருக்கின்றன.

How and when did the concept of nature get transformed into the concept of natural resources?

How and When the idea of living in the world get transformed into differing idea of pervasive- to master and control the world?

How the concept of Human being changed into Citizens and People into Populace?

How the concept of Knowledge to liveby was changed into expertise to ruleby ?

மேற்கூறிய பல கேள்விகள் அந்நியமாதலுடன் தொடர்பான கேள்விகள் என்கிறார் அகில். பிரஞ்சு புரட்சியின் முக்கிய முழக்கங்களான liberty equality இடையில் நிலவும் 'டென்ஷன்' பற்றியும் அகில் விவாதிக்கிறார். இதில் எதையாவது ஒன்றை மையமாக வைத்து நகரும்போது மற்றொன்றை மானுட உலகம் தனது சோதனைகளில் இழந்துவருவதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

Tragedy of Commons என்கிற கருத்தாக்கம் பற்றி அகில் பேசுகிறார். உலகம் Unalienated life நோக்கி செல்வதற்கு இரு முக்கிய அனுபவங்களை உள்வாங்கச் சொல்கிறார். தெருவில் கிடக்கும் 'வாலட் பணப்பையை' எடுப்பதா- எடுக்காமல் சென்றால் வேறு ஒருவர் எடுப்பாரா மாட்டாரா என்கிற 'டென்ஷன்'. இல்லை நான் எடுக்கப்போவதில்லை- எவரும் எடுக்கமாட்டார் என்கிற நிலைபெற்ற உள்ளுணர்வு வாய்க்கப் பெறுதல். காந்தியின் செயல்முறையில் லெனினைப்போல Vanguard முன்னோடும் வழிநடத்தும்படை என்பதில்லாமல் Exemplar- பேசுகின்ற அனைத்திற்கும் தான் முன்னுதாரணமாக எதையும் நோக்காமல் தன்னையும் இழந்து நிற்றல் என்பது சோதிக்கப்படுகிறது.

அடுத்த அனுபவமாக கார் ஓட்டும் ஒருவரின் பொறுப்பு. அவர் தன் செயலில் தன்னை மட்டும் பார்த்துக்கொள்ளாமல் சாலையில் வரும் அனைவரையும் அனுசரித்து

ஓட்டவேண்டிய பயிற்சி- தனக்கான பாதுகாப்புடன் பிறர் பாதுகாப்பையும் அனுசரித்து செல்லும் முறை.. இங்கு கார் என்பது சமூகமாக உருவகப்படுத்தப்படுகிறது. Individual on Social terms- Individual action but social basis அதாவது Individual liberty in non individualistic terms என்பது அகில் பில்கிரேமியிடம் நமக்கு காந்திய பார்வை செயலுக்கான விளக்கமாக கிடைக்கிறது.

Liberty- equality- Unalienated life என்கிற முக்கோணத்தில் Unalienated life என்பதை அடியாக வைத்து பார்த்தல் என்பதை அகில் சொல்கிறார். இந்த அந்நியமாதல் நீக்கம் என்கிற புள்ளி மார்க்ஸ் உடன் காந்தி இணையும் மிக முக்கிய சந்திப்பாக அவர்கள் இருவரும் Intellectual Partners ஆக நிற்கும் புள்ளியாக அகில் மதிப்பிடுகிறார்.

எவ்வழியில் சோசலிசம் என்பது விவாதத்திற்குரிய ஒன்றாக இருக்கலாம். உழைப்பை மட்டுமே நம்பி இருப்பவர்களுக்கு பக்கபலமாக மார்க்சியம் நிற்கும் என்பது தொடர்ந்து சோதிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. அதே நேரத்தில் சோசலிச கட்டுமானம் இந்தியாவில் நடைபெறவேண்டுமெனில் அதற்கு காந்தி மிக நெருக்கமாகவே தேவைப்படுகிறார். பொருளாசை, சொத்து பேராசை, குறுகிய மனோபாவம், மிருகத்தனம், வன்முறை, சுயநலம், மதவெறி, மேல்சாதி பெருமை- சாதிய ஒடுக்குமுறைகள் என அனைத்தையும் அகற்ற காந்தியம் மிக முக்கிய வழியாகவே தெரிகிறது. மார்க்சியர்கள் தங்களுக்கு மிக நெருக்கமாக கைக்கொள்ளவேண்டிய ஒன்றாகவே காந்தியின் சோசலிச உரையாடல்கள் தொடர்கின்றன.

சோசலிசம் பேசக்கூடிய எவரும் அதற்கான கூறுகளை நடைமுறையில் தன்னிடமிருந்து துவங்கவேண்டும் என தனித்தக் குரல் ஒன்று இந்திய அரசியல் வானில் ஒலித்தது. அப்படியே அது தன் வாழ்வில் நடந்தும் காட்டியது. அக்குரலின் சொந்தக்காரர் மகாத்மா காந்தியடிகள்.

கம்யூனிஸ்ட் முன்னோடிகள் அம்பேத்கர், பெரியாருடன் கூட முரண்பட்டனர். விமர்சித்தே வந்தனர். தற்போது கம்யூனிஸ்ட்கள் உடன்பாட்டு முறையில் செயல்பட்டுவருவதைப் பார்க்கிறோம். அதேபோல் காந்தியை கைக்கொள்வதிலும் கவனம் செலுத்தியிருக்கமுடியும். காந்தி வாக்கு அரசியலுக்கு உதவி செய்யாமல் போகலாம். அறம் சார்ந்த அரசியலுக்கு அவரைவிட நெருக்கமானவர்களை மார்க்சியர்கள் உணரமுடியாது.

(சத்திய ஒளி மகாத்மா புத்தகத்திற்காக காந்தி கல்வி நிலையம் திரு மோகன் அவர்கள் கேட்டதற்கிணங்க அவருக்கு ஜூலை 5 2021ல் அனுப்பிய கட்டுரை)



ஆசிரியரின் பிற நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்

2. ரோசாலக்ஸம்பர்க்

3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்

5. Trade Justice in Telecom

6. Selected Ideas of O.P Gupta

7. ஹெகல் துவங்கி..

8. கார்க்கியின் அரசியல்வெளி

9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

10. காந்தியைக் கண்டுணர்தல்

11. நேருவின் மரபு

12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்

13. அம்பேத்கரும் கம்யூனிசமும்

14. தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்
6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்

www.pattabiwrites.in

9443865366